வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 20**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : பாக்கியம் | தாலுக்கா | : | உத்தமபாளையம் |
| தகப்பனார் பெயர் | : நடராஜன் | தொழில் | : | சார்பு ஆய்வாளர் |
| ஊர் | : உத்தமபாளையம் | வயது | : | 42/2025 |

**<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)</u>**

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 18.03.2025

**<u>அரசு தரப்பில் 20ம் சாட்சி முதல் விசாரணை</u>**

நான் தற்போது தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள சைபர் செல் பிரிவில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.02.2022ம் தேதி தென்கரை காவல் நிலைய ஆய்வாளர் தென்கரை காவல் நிலைய குற்ற எண் 49/2022 பிரிவு 174 குவிமுச வழக்கில் தொடர்புடைய வோடோபோன் மற்றும் ஏர்டெல் செல்போன் நம்பர்களுக்கான Call details Record எடுத்துக் கொடுத்தும் மற்றும் மேற்படி செல்போன் provider–களிடம் சம்பந்தப்பட்ட செல்போன் நம்பர்களுக்கு பிரிவு 65B IEA படி சான்று பெற்றுக் கொடுத்து, இந்த வழக்கில் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் செல்போனை நான் கைப்பற்றுவதற்கு உதவியாக இருந்தேனா என்றால் இல்லை, செல்போன் நம்பர்களின் Call details Record–ஐ தான் நான் பெற்றுக் கொடுத்தேன். செல்போன் நம்பரில் உரியவரை தவிர வேறு நபர்களும்

பேசலாம் என்றால் பேசலாம். Call details Record–ஐ நான் எந்த தேதியில், எப்போது பெற்றேன் என்றால் email மூலமாக சம்பந்தப்பட்ட கம்பெனிகளுக்கு மெயில் அனுப்பி Call Record details பெறப்பட்டது. Call Record details–ல் யார், யார், என்ன பேசினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, புலன் விசாரணை அதிகாரிக்குத்தான் தெரியும். Call Record details எந்த தேதியிலிருந்து, எந்த தேதி வரையிலும் தொலைபேசி கம்பெனிகளிலிருந்து வாங்கப்பட்டது என்றால் அது எனக்கு தற்போது ஞாபகமில்லை. சுமார் ஒரு ஆண்டு வரையிலும் வாங்குவது வழக்கமாகும். வோடோபோன் மற்றும் ஏர்டெல் செல்போன் கம்பெனிகளிலிருந்து Call Record details வாங்கப்பட்டது. Nodal Officer–ரின் பெயர் விவரங்களை ஆய்வாளரின் விசாரணையில் நான் சொன்னேனா என்றால் இல்லை. குரல் பதிவுகள் பதிவு செய்ய முடியாது. நான் சொன்னதுபோல் எந்த Call Record details ம் நான் பெற்றுத் தரவில்லை என்றாலும், அரசுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**<u>மறு விசாரணை</u>** – இல்லை

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
18.03..2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 21**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தாலுக்கா | : | மதுரை |
| தகப்பனார் பெயர் | : | பாண்டி | தொழில் | : | சார்பு ஆய்வாளர் |
| ஊர் | : | சமயநல்லூர் | வயது | : | 42/2025 |

<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 18.03.2025

**<u>அரசு தரப்பில் 21ம் சாட்சி முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.02.2022ம் தேதி தென்கரை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது காலை 6மணிக்கு நிலைய பணியில் இருந்தபோது, கள்ளிப்பட்டி முத்தையா கோவில் தெருவைச் சேர்ந்த பாண்டியன் மகன் அய்யனார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, புகாரின் தன்மைக்கேற்ப, நிலைய குற்ற எண் 49/2022 பிரிவு 174 குவிமுச–ன்படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ13.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவின் அசலையும் கனம் பெரியகுளம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் சுகுமாறன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

03.02.2022ம் தேதி எந்த நேரத்திலிருந்து, எந்த நேரம் வரையிலும் பணியில் இருந்தேன் என்றால் அன்று முழுவதும் நிலைய பணியில் இருந்தேன், நேரம் ஞாபகமில்லை. புகார் வாக்குமூலம் பெற்ற பின்பு நான் எவ்வளவு நேரம் நிலைய பணியில் இருந்தேன் என்றால் சுமார் 11 மணி வரை இருந்தேன். புகார் கொடுத்தவருடன் யார், யார் வந்தார்கள் என்றால் எனக்கு அது ஞாபகமில்லை. புகார் வாங்கியபோது யார், யார் காவல் நிலையத்தில் பணியில் இருந்தார்கள் என்றால் நானும், கணினி பிரிவில் பணி செய்யும் காவலரும் இருந்தோம். காலையில் ஒவ்வொரு நாளும் வருகை பரேடு நடத்துவது வழக்கம் என்றால் சரிதான். அன்றைய தினம் யார், யார் வருகை பரேடில் இருந்தார்கள் என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. புகாரை புகார்தாரர் எழுதிக் கொண்டு வந்தார். புகாரை கொடுத்தவருக்கு எழுதப் படிக்க தெரியுமா என்ற விவரம் எனக்கு தெரியும். புகாரை யார் எழுதிக் கொடுத்தார்கள் என்று சொல்லவில்லை. புகார்தாரர் காவல் நிலையத்தில் எவ்வளவு நேரம் இருந்தார் என்றால் சுமார் 45 நிமிடங்கள் இருந்திருப்பார். ஆய்வாளர் பார்வைக்கு புகாரை எப்போது வைத்தேன் என்றால் காலை 6.30 மணிக்கு புகாரை ஆய்வாளர் சுகுமாறன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். காலை 6.35 மணிக்கு ஆய்வாளர் நிலையத்தில் இருந்தாரா என்றால் இல்லை. ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு எப்போது வந்தார் என்றால் நான் போன் செய்து சொன்னவுடன் வந்து விட்டார். வந்தவுடன் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்றாரா என்றால் எனக்கு அது தெரியாது, ஆய்வாளரிடம்தான் கேட்க வேண்டும். இந்த வழக்கின் புலன் விசாரணைக்கு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேனா என்றால் இல்லை. புகாரை நான் படித்துப் பார்த்தேன். 02.02.2022ம் தேதி சுமார் 10மணியளவில் நான் என் வீட்டில் இருக்கும்போது, கள்ளிப்பட்டி செங்கனியான் கோவில் தெருவை சேர்ந்த பாண்டி என்பவரின் மகன் செல்வம் என்பவர் வந்து வடுகபட்டி பைப்பாஸ் ரோட்டில் உள்ள பாலத்தில் கீழே உள்ள கிடங்கில் உன் அண்ணன் போதுராஜா விழுந்து கிடப்பதாக சொன்னாதாக புகாரில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். புகாருடன் செல்வம் உடன் வந்தாரா என்றால் ஞாபகமில்லை. புகாரில் எனது

அண்ணனை தூக்கி கொண்டு பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தோம் என்று சொல்லியுள்ளார். தென்கரை காவல் நிலையத்திற்கும், பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு துூரமிருக்கும் என்றால் சுமார் 300 மீ துூரமிருக்கும். பெரியகுளம் அரசு மருத்துவமனையில் ஸ்டேசன் புறக்காவல் நிலையம் உள்ளது என்றால் உள்ளது. புகார் கொடுக்க வந்தவருக்கு முதல் தகவல் அறிக்கையின் நகல் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உடனே கொடுத்தேன். புகார்தாருக்கு போதுராஜா இறந்த விவரம் 02.02.2022 ம் தேதி இரவு 10 மணிக்கு தெரிய வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புறக்காவல் நிலையத்தில் 24 மணி நேரமும் போலீசார் இருப்பார்கள் என்றால் சரிதான். புறக்காவல் நிலையத்தில் விபத்தில் காயமடைந்த நபர்கள் சம்பந்தமாகவும் மற்றும் ஏனைய வழக்குகள் சம்பந்தமாக காயம்பட்டு அரசு மருத்துவமனைக்கு வரும் நபர்கள் சம்பந்தமாகவும் உடனேயே மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். புறக்காவல் நிலையத்திலிருந்து உடனேயே சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கும் தகவல் தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். புறக்காவல் நிலையத்தில் சிஜடி போலீசாரும் இருப்பார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. இறந்துபோன நபர் 02.02.2022 தேதி 10.45 மணிக்கு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றால் சரிதான். இறந்த நபருடன் 3 ம் எதிரி ராஜாவும் மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. இறந்த நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட உடனே தென்கரை காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். தென்கரை காவல் நிலையத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக தகவல் தெரிவிக்கப்பட்டபோது நான் காவல் நிலையத்தில் இருந்தேனா என்றால் இருந்தேன். நான் தகவல் தெரிந்தவுடன் மருத்துவமனை சென்றேனா என்றால் சென்றேன். நான் மருத்துவமனை சென்றபோது மணி என்ன இருக்கும் என்றால் இரவு 11.30 மணியிருக்கும். நான் மருத்துவமனையில் போதுராஜாவை பார்த்தேனா என்றால் பார்த்தேன். 3 ம் எதிரி காயம்பட்ட ராஜாவை மருத்துவமனையில் உள்நோயாளியாக

சேர்க்க வேண்டாம் என்று நான் கூறி, அவரை புறநோயாளியாக சேர்த்து அவருக்கு சிகிச்சை அளித்த பின் என்னுடன் நான் காவல் நிலையத்திற்கு விசாரணை என்ற பெயரில் அழைத்து வந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் பற்றி 02.02.2022 தேதியில் இரவு 10 மணிக்கு முன்பே தெரிந்து விட்டது என்றாலும், நான், உடனேயே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல், காலம் தாழ்த்தி பின்னர் இந்த வழக்கிற்கு தகுந்தபடி மேலதிகாரிகளின் உத்தரவிற்கிணங்க முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது சந்தேகம் உள்ளதாக புகார்தாரர் சொல்லியுள்ளார் என்றால் இல்லை, எதிரிகள் இறந்த நபருடன் கூட இருந்தார்கள் என்றுதான் சொல்லியுள்ளார். நான் மருத்துவமனை சென்றபோது, இறந்த நபரின் உறவினர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். புகார்தாரர் அய்யனாரும் இருந்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை பெரியகுளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். தென்கரை காவல் நிலையத்திற்கும், பெரியகுளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கிமீ தூரமிருக்கும். முதல் தகவல் அறிக்கையை காவலர் சிவபிரகாஷ்பாபு என்பவர் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை 04.02.2022 அன்றுதான் நீதிமன்றத்திற்கு கொடுத்தேன் என்றால் சரிதான். நான் பக்கத்தில் இருக்கும் நீதிமன்றத்தை 1 கிமீ தூரமிருக்கும் என்று மேற்படி முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த காலதாமதத்தை ஈடு கட்டுவதற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முறையாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தால், நான் உடனேயே முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்திருப்பேன் என்றாலும், நான் முறையாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாததால்தான் காலதாமதமாக 04.02.2022 தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை சரியான நேரத்தில் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் வழக்கு என்றாலும், அனைத்து சாட்சிகளும் பொய் சாட்சியம் என்றாலும் சரியல்ல. புகாரை நான் சொன்ன விதத்தில் அய்யனாரிடம் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும்,

இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் சிசிடிவி கேமரா இருக்கிறதாஎன்றால் இருக்கிறது. 02.02.2022 மற்றும் 03.02.2022 தேதிகளில் யார், யார் காவல் நிலையத்திற்கு வந்தார்கள் என்ற விவரம் பதிவாகி இருக்கும் என்றால் பதிவாகியிருக்குமா என்பது பற்றி எனக்கு தெரியவில்லை. புகார் கொடுப்பதற்கு முன்பாகவே வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு நன்கு தெரியுமா என்றால் மருத்துவமனையிலிருந்து தகவல் வந்தவுடன் நான் உடனே மருத்துவமனை சென்று விவரங்கள் அறிந்து, பின்னர் புகார்தார் நிலையம் வந்து புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்தேன். மருத்துவமனையில் போதுராஜா என்பவர் இறந்து விட்டதாகவும், ராஜா என்பவருக்கு காயம்பட்டதாகவும் தெரிந்து கொண்டேன். போதுராஜாவை மருத்துவமனையில் வைத்து பார்த்தேன், ராஜாவை மருத்துவனையில் வைத்து பார்த்தேன் என்றால் இல்லை. மருத்துவரிடம் ராஜா சம்பந்தமாக கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இரவு 11 மணிக்கு முன்பாகவே போதுராஜாவும், எதிரி ராஜாவும் மருத்துவமனை சென்றதாக எனக்கு தகவல் கிடைத்து என்றால் சரிதான். போதுராஜாவும், எதிரி ராஜாவும் மருத்துவமனையில் இருக்கும் விசயத்தை நான் எனது மேலதிகாரிகளுக்கு சொன்னோ என்றால் இல்லை. எனது மேலதிகாரிகளுக்குகு நான் இந்த வழக்கு சம்பவம் பற்றி தகவல் எதுவும் தெரிவிக்காததன் உள்நோக்கம் என்ன என்றால் எனக்கு உள்நோக்கம் எதுவுமில்லை, புகார் பெற்றபின்பு தகவல் கொடுக்கலாம் என்று இருந்தேன். 02.02.2022 தேதியில் வழக்கு சம்பவம் பற்றி தெரிந்தும் மறுநாள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் வரையிலும் மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்காமல் இருந்ததன் காரணம் புகார் பெற்று தகவல் சொல்லலாம் என்றுஇருந்தேன். எதிரி ராஜா 03.02.2022 அதிகாலை 00.05 மணிக்குதான் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வருகிறார் என்றாலும், நான் எதிரி ராஜாவை வேண்டுமென்றே இந்த வழக்கில் எதிரியாக சேர்க்க வேண்டுமென்ற

உள்நோக்கத்தில் என்னுடன் இருந்த ராஜாவை பின்னிட்டு இந்த வழக்கில் எதிரியாக சேர்க்க உதவியாக இருந்தேன் என்றால் சரியல்ல. 02.02.2022 தேதி இரவு 10 மணிக்கே வயர்லெஸ் மூலம் எஸ்பி, டிஎஸ்பி ஆகிய உயர் அதிகாரிகளுக்கு இந்த வழக்கு சம்பந்தமான தகவல் தெரிவிக்கப்பட்டது என்றும், நான் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்படவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த நபர் இயற்கையாக இறந்து விட்டார் என்ற விவரம் தெரிந்தும், புகார்தாரரிடம் வேண்டுமென்றே பொய்யான வாக்குமூலம் வாங்கி அசாஆ 13 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் தெரிந்த உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல், பின்னிட்டு வழக்கிற்காக மேலதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க பொய்யான புகாரின்அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
18.03..2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.